பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 24 திங்கட்கிழமை 09.08.2021 கதிர் 143

## மேலும் 130 பேர் நேற்று சிக்கினர்

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 130 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இதன்படிநாட்டில்இதுவரைதனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 53 ஆயிரத்து 701 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# பொலிஸ், சுகாதார அதிகாரிகளின் தடையையும் மீறி யாழில் ஆசிரியர்கள் வாகனப் பேரணிப் போராட்டம்!






(எஸ்.நிதர்ஷன்)

தமது சம்பள முரண்பாட்டுப் பிரச்சினைக்குதீர்வுகாணுமாறுவலியுறுத்தியும், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தை வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறு கோரியும் ஆசிரியர்களால் இன்று யாழ்ப்பாணத்தில் வாகனப் பேரணிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம்முற்றவெளியில்இருந்து ஆரம்பித்து, யாழ். நகர வீதி வழியாக மாவட்ட செயலகம் வரையில் இந்தப் பேரணி நடத்தப்பட்டது.

வாகனப் பேரணியானது ☞2

# ஆபத்தான கட்டத்தில் இலங்கை: அடுத்த மாதம் மிகவும் அவதானம்

## மக்களுக்கு இராணுவத் தளபதி எச்சரிக்கை



**“இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ளதால் ஆபத்தான கட்டத்தில் இருக்கின்றோம். அடுத்த ஒரு மாத காலம் மிகவும் அவதானம். எனவே, அரசால் அமுல்படுத்தப்பட்டுள்ள சுகாதார விதிகளை அனைவரும் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.”**

**- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

☞2

## இராணுவ வைத்தியசாலையிலேயே ரணிலும் தடுப்பூசி பெற்றுக்கொண்டார்

### இராணுவத் தளபதி பதிலடி



கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட கருத்துக்கு, இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா பதிலளித்துள்ளார்.

கண்டியில் இன்று நடைபெற்ற நிகழ்வொன்றில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி ☞2

## பருத்தித்துறையிலும் ஆசிரியர்கள் போராட்டம்




**(எஸ்.நிதர்ஷன்)**

சம்பள முரண்பாட்டைத் தீர்த்து வைக்கக் கோரியும், சேர் ஜோன் கொத்தலாவல சட்டமூலத்துக்கு எதிராகவும் பருத்தித்துறையில் ஆசிரியர் சமூகத்தினர் இன்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமராட்சி கல்வி வலய இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் மற்றும் அதிபர் சங்கம் ஆகியன இணைந்து அதிபர்கள், ஆசிரியர்கள் தொழிற் சங்கமாகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சம்பள உயர்வைக் கேட்கவில்லை; ☞2

## மின் தகன நிலையத்தை அதிகரிக்கக் கோரிக்கை

**(ந.லோகதயாளன்)**

நாளுக்கு நாள் கொரோனா மரணம் அதிகரிப்பதால் யாழ். கோம்பையன் மயானத்தில் உள்ள மின் தகன நிலையத்தை அதிகரிக்க அனுமதிக்குமாறு மாநகர ஆணையாளர், உள்ளூராட்சி ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம்மாவட்டத்தில்தற்போது மாநகர சபையின் ஆளுகையில் உள்ள ஒரேயொரு மயானத்தில் மட்டுமே மின் தகன வாய்ப்பு உள்ளது. இருந்தபோதும் இந்த வசதி உள்ள கோம்பையன் மயானத்தில் நாளொன்றுக்குச் சாதாரணமாக 3 உடல்களும் உச்ச பட்சமாக 4 உடல்களும் மட்டுமே தகனம் செய்ய முடியும். எந்த வழிமுறையிலும் 5ஆவது ☞2

## மகனின் வெறியாட்டத்தில் தந்தை பரிதாப உயிரிழப்பு

திருகோணமலை மாவட்டம், பாலையூற்றுப் பகுதியில் மகனின் தாக்குதலில் தந்தை உயிரிழந்துள்ளார்.

தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தந்தை சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாலையூற்று - மயான வீதியில் வசித்து வரும் 60 வயதான பொன்னத்துரை ராஜா என்பவரே இவ்வாறு மரணித்துள்ளார்.

கடந்த 6ஆம் திகதி இரவு 9 மணியளவில் வீட்டில் ஏற்பட்ட தகராறு காரணமாக மகன் தன் தந்தையைத் தலையில் தாக்கி காயம் ஏற்படுத்திய நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலை தீவிர சிகிச்சை பிரிவில் அவர் சேர்க்கப்பட்டிருந்தார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த தந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். ☞2



## பண்ணைக் கடலில் தவறி வீழ்ந்த இளைஞர் இன்று சடலமாக மீட்பு!

**(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)**

யாழ்ப்பாணம், பண்ணைக் கடலில் தவறி விழுந்து காணாமல்போன இளைஞர், இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 31 வயதுடைய வி.கௌதமன் எனும் இளைஞரே இவ்வாறு சடலமாக ☞2

## இராணுவ வைத்தியசாலையிலேயே .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒன்றுக்கு இராணுவத் தளபதி பதிலளித்துள்ளார்.

கொரோனாத் தடுப்பு ஜனாதிபதி செயலணி மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்த ரணில் விக்கிரமசிங்க, இராணுவத்தினர் முன்னெடுக்கும் தடுப்பூசி வழங்கல் திட்டத்தையும் விமர்சித்திருந்தார்.

இந்நிலையில், ரணில் விக்கிரமசிங்கவும் இராணுவ வைத்தியசாலையிலேயே தடுப்பூசி பெற்றுக்கொண்டார் என்று இராணுவத் தளபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இராணுவத்திடம் இருந்து தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட ஒருவர், நாட்டு மக்கள் தடுப்பூசி பெறுவதைப் பற்றி எவ்வாறு விமர்சிக்க முடியும் என்றும் சவேந்திர சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

கொரோனாத் தடுப்புச் செயலணியில் ஜனாதிபதி, துறைசார் அமைச்சர்கள், வைத்திய நிபுணர்கள் இருக்கின்றனர் என்றும், இராணுவத்தினர் தன்னிச்சையாகத் தீர்மானங்களை மேற்கொள்வதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பொலிஸ்,.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆரம்பமாகி நகரை அடைந்தபோது பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினர் தற்போதைய நாட்டு நிலைமையில் இந்தப் பேரணியை நடத்த முடியாது எனத் தடுத்து நிறுத்தினர்.

எனினும், தாம் சுகாதார ஒழுங்குவிதிகளைப் பின்பற்றியே பேரணியை நடத்துவதாகக் கூறி ஆசிரியர்கள் பேரணியைத் தொடர்ந்தனர்.

இதில் 500 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

## மின் தகன நிலையத்தை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உடல் தகனம் செய்யும் தன்மை கிடையாது.

இருந்தபோதும் தற்போது தினமும் 4 உடல்கள் தகனம் இடம்பெறுகின்றது. மேலதிக எண்ணிக்கையில் நாள் ஒன்றுக்கு 12 உடல்கள் தகனம் செய்யும் மின் தகனத்தைப் பொருத்துவதற்கு 3 மாத கால அவகாசமும் தேவைப்படும். எனவே, இதற்கான அனுமதியை உடனடியாக வழங்கி உதவுமாறு மாநகர சபையால் கோரப்பட்ட அனுமதி தற்போது மாகாண ஆளுநரின் கவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், 4 உடல்களைத் தகனம் செய்யும் ஓர் மின் தகன நிலையம் அமைப்பதற்கு 2 கோடி ரூபா செலவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆபத்தான கட்டத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஊடகங்களிடம் இன்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாத் தொற்றுக்கு எதிராகத் தடுப்பூசி பெறாதவர்கள் இருந்தால் முடிந்தளவு விரைவில் அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மூன்றாவது தடுப்பூசியும் விரைவில் வழங்கப்படலாம். கொரோனாவால் தற்போது அதிகமாக உயிரிழப்பவர்கள் 60 வயதுக்கு மேற்பட்ட தடுப்பூசி பெறாதவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இதுவரையில் இராணுவத்தினரால் கொழும்பு விகாரமஹா தேவி பகுதியில் அஸ்ட்ராஜெனெக்காவின் இராண்டாவது தடுப்பூசியும், சினோபோர்ம் முதலாவது மற்றும் இரண்டாவது தடுப்பூசியும் வழங்கப்படுகின்றது.

இதனால் மக்கள் முடிந்தளவு வேகமாகத் தடுப்பூசி நிலையங்களுக்குச் சென்று தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுங்கள். அதன்போதும் சுகாதாரப் பிரிவு வழங்கும் ஆலோசனைகளை உரிய முறையில் பின்பற்றுங்கள் - என்றார்.

## பருத்தித்துறையிலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எமது சம்பளத்தையே கேட்கின்றோம், பிள்ளைகளின் கல்வியைச் சிதைக்காதே, கல்வியை உறுதிப்படுத்து, அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டைத் தீர்த்துவை, இலவசக் கல்வியை இராணுவமயமாக்காதே, இருபத்து நான்கு வருட அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வை வழங்கு, கொரோனாப் போர்வையில் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடாதே உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் நடைபெற்றது.

முன்னதாக பருத்தித்துறை நகரிலிருந்து பேரணியாக ஆரம்பமாகிய போராட்டம், பருத்தித்துறை நவீன சந்தை சுற்று வீதியால் பஸ் தரிப்பு நிலையத்தை வந்தடைந்து நிறைவுற்றது.

இந்தப் பேரணியில் வடமராட்சி கல்வி வலய அதிபர்கள், ஆசிரியர்களின் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த 14 சங்கங்களின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

## பண்ணைக் கடலில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பண்ணைப் பாலத்தடியில், நேற்று மாலை, குறித்த இளைஞர் தனது நண்பர்களுடன் பொழுதைக் கழித்துக் கொண்டு இருந்த வேளை தவறி விழுந்துள்ளார்.

தவறி விழுந்தவரை பாலத்தின் கீழான நீரோட்டம் அடித்துச் சென்றிருந்த நிலையில், நேற்று மாலை சுமார் 2 மணி நேரங்களுக்கு மேலாகக் கடற்படையினர் தேடுதல் நடத்தியிருந்தனர்.

இந்நிலையில், பண்ணைக் கடலில் இன்று காலை, குறித்த இளைஞர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## மகனின் வெறியாட்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த தாக்குதல் தொடர்பில் மகனைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ரணிலின் யோசனை ஏற்கப்படுமா?

கொவிட் வைரஸ் பரவல் காரணமாக தற்போது மிகவும் அச்சுறுத்தலான – அதேவேளை தீர்மானம் மிக்க – சூழ்நிலைக்கு நாடு முகம் கொடுக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் நிலைமைகளை கையாள முடியாத மிக மோசமான ஒரு கட்டம் ஏற்பட்டுள்ளது என அவர்களின் சங்கமே தெரிவித்துள்ளது.

கொரோனாவின் டெல்டா ரக வைரஸின் மோசமான பரவல் காரணமாக மேல் மாகாணத்தில் சகல அரச வைத்தியசாலைகளிலும் கொவிட் நோயாளர்கள் நிரம்பி வழியும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அதனால் வைத்திய கட்டமைப்பே – சுகாதார சேவையே –ஸ்தம்பிக்கும் சூழ்நிலை தோன்றியுள்ளது.

இதனால் மேல்மாகாணத்தில் அடையாளம் காணப்படும் வைரஸ் தொற்றாளர்களை வீடுகளில் வைத்தே சிகிச்சை வழங்கும் ஒரு திட்டத்தை முன்னெடுப்பதற்கு சுகாதாரப் பணியகம் தீர்மானித்திருக்கிறது என சுகாதாரப் பணிப்பாளர் அசேல குணவர்த்தன தெரிவித்திருக்கிறார்.

நோயாளர்கள் எண்ணிக்கை தினசரி அதிகரித்த வண்ணம் உள்ளது. குறைந்த அளவு தாதியர்கள் மற்றும் ஊழியர்களைக் கொண்ட சுகாதார சேவைப் பிரிவு அவர்களை கையாள முடியாத நிலைமை வந்துள்ளது.

டெல்டா வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளர்களைக் கையாள்வதற்கு தேவையான அவசர சிகிச்சைப் பிரிவுகள் நாட்டில் போதுமான அளவு இல்லை. இந்த வகை நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அவர்களைக் காப்பாற்ற முடியாத நிலை தோன்றி, மரணங்கள் அதிகரிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இப்போதைய நிலையில் மரணங்களைக் கட்டுப்படுத்தாவிட்டால் அதற்குமேல் அதிகரிக்கின்ற மரணங்களை கட்டுப்படுத்துவதற்கான ஆயத்தங்கள் எதுவும் தம்மிடம் இல்லை என்பதை சுகாதாரப் பிரிவு ஒப்புக்கொண்டுள்ளது.

இப்போது நாட்டின் வைத்தியசாலைகளில் பிண அறைகளில் உடலங்கள் நிறைந்து கிடக்கின்றன. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மோசமான நிலை காணப்படுகிறது.

வைத்தியசாலைகளில் நோயாளிகளைப் பராமரிக்க முடியாத சூழலில் வைத்தியசாலைக் கொத்தணிகள் புதிது புதிதாக உருவாகும் ஆபத்தும் ஏற்படுகின்றது.

தொற்றால் உயிரிழக்கும் நோயாளர்களின் சடலங்களை இரு தினங்களுக்குள் தகனம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார். எனினும் அது எவ்வளவு தூரம் யதார்த்தத்தில் சாத்தியம் என்பது தெரியவில்லை

இந்த பின்புலத்தில்தான் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு முக்கிய கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்.

இராணுவத் தளபதி தலைமையிலான தற்போதைய கொவிட் கட்டுப்பாட்டுச் செயலணியின் செயற்பாடுகளினால் எவ்வித முன்னேற்றமும் இதுவரையில் ஏற்படவில்லை. வெறும் ஊடக காட்சிப்படுத்தல் மாத்திரமே இந்தச் செயலணியினால் முன்னெடுக்கப்படுகிறது. ஆகவே இந்தச் செயலணியை நீக்கி, உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளுக்கு அமைய விசேட வைத்திய நிபுணர்கள் அடங்கிய குழுவை நியமிக்குமாறு முன்னாள் பிரதமர் கோரியிருக்கிறார்.

நாடு எதிர்கொண்டு வரும் மிக மோசமான நிலைமையில் ஒரு முக்கியமான ஆலோசனையாக இது தோன்றுகின்றது. வெறுமனே அறிக்கை போர் மூலம் – அறிவித்தல்கள் வாயிலாக – கொரோனா வைரஸின் சவாலைச் சமாளிக்க முடியாது என்ற உண்மை தெளிவாகிவிட்டது.

ஆகவே முன்னாள் பிரதமரின் இந்த யோசனையை அரசு நிச்சயம் கவனத்தில் எடுத்து ஆக்கபூர்வமான முடிவொன்றை அறிவிக்கவேண்டும். இது நாட்டின் அவசர – அவசிய – நெருக்கடி கால விடயம். இதில் தீர்க்கமான தீர்மானம் ஒன்று உடனடியாகத் தேவை.

# 2 லட்சத்திற்கு மேற்பட்டோருக்கு நேற்று தடுப்பூசி செலுத்தப்பட்டது

## சுகாதார அமைச்சு தகவல்

இலங்கையில் நேற்று 2 லட்சத்து 48 ஆயிரத்து 656 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

23 ஆயிரத்து 135 பேருக்கு அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசியின் முதல் டோஸ் வழங்கப்பட்டதாகவும் 1,021 பேருக்கு இரண்டாவது டோஸ் வழங்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 69 ஆயிரத்து 041 பேருக்கு முதல் சினோபோர்ம் தடுப்பூசியின் முதல் டோஸ் வழங்கப்பட்டதுடன் ஒரு லட்சத்து 53 ஆயிரத்து 678 பேருக்கு இரண்டாவது டோஸ் வழங்கப்பட்டது.

இதற்கிடையில், 711 பேருக்கு பைசர் தடுப்பூசியின் முதல் டோஸும் 75 பேருக்கு இரண்டாவது டோஸும் 995 பேருக்கு முதல் மொடர்னா தடுப்பூசி டோஸும் வழங்கப்பட்டன என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் தடுப்பூசி நடவடிக்கை ஆரம்பித்ததில் இருந்து இதுவரை முதல் டோஸ் தடுப்பூசி ஒரு கோடியே 9 லட்சத்து 86 ஆயிரத்து 524 பேருக்கும் இரண்டாவது டோஸ் 27 லட்சத்து 78 ஆயிரத்து 714 பேருக்கும் முழுமையாகவும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது

# டெல்டா வைரஸுக்கு எதிரான இலங்கையின் போர் சுகாதார அமைப்பை சோர்வடையச் செய்துள்ளது

## வைத்தியர்கள் விசனம்

டெல்டா வகைக்கு எதிரான இலங்கையின் போர் நாட்டின் சுகாதார அமைப்பையும் வைத்தியசாலைகளையும் சோர்வடையச் செய்துள்ளதென வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது இன்னும் ஆரம்ப கட்டத்தில் உள்ளது என்றும் எதிர்வரும் மூன்று வாரங்களில் இந்த நிலை மேலும் மோசமடையும் என்றும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் வாரங்களில் இன்னும் அதிகமான கொரோனா இறப்புகள் பதிவாகும் என்பதோடு, ஏனைய நோய்களால் ஏற்படும் இறப்புகளும் அதிகரிக்கும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏனெனில் மற்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் தற்போது வைத்தியசாலைகளுக்குச் செல்லப் பயப்படுகிறார்கள் என்பதோடு, ஒட்சிஜன் பற்றாக்குறையாலும் இறப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாமென அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஏற்கனவே நாடு முழுவதும் உள்ள முக்கியமான வைத்தியசாலைகளில் படுக்கைகள் இன்றி நோயாளிகள் அவதிபடுகின்றனர் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், எதிர்வரும் வாரங்களில் தினசரி கொரோனா பாதிப்பு 5 ஆயிரம் வரையில் அதிகரிக்கக்கூடும் என்றும் மரணங்களின் எண்ணிக்கையும் 200 ஐ எட்டும் என்றும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# மேலுமொரு தொகுதி பைசர் தடுப்பூசிகள் இன்று நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டன



கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான மேலுமொரு தொகுதி பைஸர் தடுப்பூசிகள் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

அதன்படி, ஒரு லட்சம் பைஸர் தடுப்பூசிகள் இன்று (திங்கட்கிழமை) நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் இதுவரையில், 2 லட்சத்து 51 ஆயிரத்து 474 பேருக்கு மொடர்னா தடுப்பூசியின் முதலாவது டோஸும் 533 பேருக்கு மொடர்னா தடுப்பூசியின் இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மேல்மாகாணத்தில் நாளை தடுப்பூசி

மேல் மாகாணத்தில் வசிக்கும் எந்தவொரு தடுப்பூசியும் இதுவரை செலுத்தப்படாதவர்களுக்கு நாளை (செவ்வாய்க்கிழமை) முதல் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது.

அதற்கமைய 60 வயதுக்கு மேற்பட்ட மற்றும் தீவிர நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளோருக்கு நாளை முதல் தடுப்பூசி செலுத்தப் படவுள்ளது என அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, நாளை முதல் மூன்று தினங்களுக்கு இந்தத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. தடுப்பூசியைப் பெறவுள்ளோர் 1906 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி முற்பதிவை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

# பாண் வெதுப்பகங்களிலும் சடலம் தகனம் செய்ய நேரிடும்

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர் கிண்டல்

கொவிட் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமாக அரசாங்கம் முன்னெடுத்து வரும் ஊடக கண்காட்சியை நிறுத்தி விட்டு, தொற்று நோயைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அவசியமான நேரத்தில் நாட்டை மூட நடவடிக்கை எடுக்கவில்லை. ஆபத்து அதிகரித்த வந்த போது, கட்டுப்பாடுகளை கடுமையாக்குவதற்கு பதிலாக கட்டுப்பாடுகளைத் தளர்த்தினர். நாளாந்தம் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என விசேட மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். கொரோனா மரணங்களைத் தகனம் செய்ய போதுமான சுடுகாடுகள் இல்லை என்ற காரணத்தால், பாண் வெதுப்பகங்களிலும் சடலங்களை தகனம் செய்ய நேரிடும்.

நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளை கூட இடைநிறுத்திவிட்டு, தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாட்டினருக்கு கட்டுப்பாடுகளுடன் உம்ரா புனித பயணத்திற்கு அனுமதி - சவுதி அரசு முடிவு



சவுதி அரேபியாவில் இதுவரை 5 லட்சத்து 32 ஆயிரத்துக்கும் அதிக மானவர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு உள்ளனர். அவர்களில் 8,300 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பு காரணமாக வெளிநாட்டு பயணிகள் வருவதற்கு 18 மாதங்களுக்கு முன்பு சவுதி அரேபிய அரசு தடை விதித்தது. தற்போது ஒகஸ்ட் 1ஆம் திகதி முதல் தடுப்பூசி செலுத்திக் கொண்ட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சவுதி அரேபியாவுக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

கடந்த மாதம் தடுப்பூசி செலுத்திக் கொண்ட சவுதி அரேபிய நாட்டைச் சேர்ந்த 60 ஆயிரம் பேருக்கு மட்டுமே ஹஜ் பயணம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

2022ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஏழாம் திகதி முதல் 12ஆம் திகதி வரை ஹஜ் பயணம் நிகழ உள்ளது.

உம்ரா புனித பயணம் மெக்கா மற் றும் மதினா ஆகிய இரு நகரங்களையும் உள்ளடக்கியது. ஹஜ் பயணம் போன்று இல்லாமல் உம்ரா பயணத்தை ஆண்டில் எப்பொழுது வேண்டுமானாலும் மேற்கொள்ளலாம்.

தற்போது உம்ரா புனித பயணத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

உம்ரா புனித பயணத்திற்கு முதலில் மாதத்துக்கு 60 ஆயிரம் பயணிகள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அந்த எண்ணிக்கை ஒரு மாதத்துக்கு 20 லட்சமாக உயர்த்தப்படும் என்று சவுதி அரேபிய அரசுக்குச் சொந்தமான சவுதி பிரஸ் ஏஜென்சி செய்தி நிறுவனம் கூறி உள்ளது.

பைஸர் மற்றும் பயோஎன்டெக் நிறுவனங்கள் இணைந்து தயாரித்த கொரோனாத் தடுப்பூசி, ஒக்ஸ்போர்டு - அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி, மாடர்னா தடுப்பூசி மற்றும் ஜான்சன் அண்ட் ஜான்சன் ஆகிய நிறுவனங்கள் தயாரித்த நான்கு தடுப்பூசிகளையும் சவுதி அரேபிய அரசு அங்கீகாரம் வழங்கி உள்ளது.

# ஈவியாவில் காட்டுத் தீ பரவல் குடியிருப்புவாசிகள் வெளியேற்றம்



கிரேக்க தீவான ஈவியாவில் காட்டுத்தீ தொடர்ந்து பரவி வருவதால், குடியிருப்புவாசிகள் கடல் வழியாக பாதுகாப்பாக வெளியேறி வருகின்றனர். 2,000 இற்கும் மேற்பட்ட மக்கள் ஏற்கனவே வெளியேற்றப்பட்டுள்ளனர். தற்போது வயதானவர்கள் படகுகளில் வெளியேறி வருகின்றனர்.


தீயை அணைக்க போதுமான உதவி அனுப்பப்படவில்லை என்று உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர். தீவின் பல பகுதிகள் ஏற்கனவே அழிக்கப்பட்டுவிட்டன.

கிரேக்கத்தில் 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வெப்பம் 45சி (113எஃப்) ஆக அதிகரித்துள்ளது. கடந்த சில நாள்களாக நாட்டில் பல காட்டுத் தீ பதிவாகியுள்ளது. எதென்ஸின் வடக்கு புறநகர்ப் பகுதியில் ஏற்பட்ட தீ தற்போது தணிந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மனிதனால் தூண்டப்பட்ட காலநிலை மாற்றத்தால் இது போன்ற வெப்ப அலைகள் அதிகமாகவும் தீவிரமாகவும் மாறி வருகின்றன. அடுத்தடுத்த வெப்பமான, வறண்ட வானிலை காட்டுத்தீயைத் தூண்டும்.

எதென்ஸின் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பெரிய தீவான ஈவியாவில், இரண்டு தீயணைப்பு முனைகள் ஆயிரக்கணக்கான ஹெக்யேர் நிலங்களை அழித்துள்ளன.

தீவின் பல கிராமங்களில் தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர்.



# ஜப்பானை அச்சுறுத்தும் லூபிட் புயல்

ஜப்பானின் தெற்கு மற்றும் தென்மேற்கு பிராந்தியங்களை லூபிட் என்கிற புயல் அச்சுறுத்தி வருகிறது. இதன் காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தெற்கு மற்றும் தென்மேற்கு பிராந்தியங்களில் 90க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

அதேபோல் மீரினே புயல் அச்சுறுத்தல் காரணமாக தலைநகர் டோக்கியோ அருகே உள்ள சிபா நகரிலிருந்து 29 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற அரசு உத்தரவிட்டுள்ளது.

புயல் நெருங்கி வரும் நிலையில் டோக்காய் மற்றும் கான்டோ பிராந்தியங்கள் மற்றும் இசு தீவுகளின் கடலோரப் பகுதிகளில் இடியுடன் கூடிய மழை தீவிரமடைந்துள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில் இந்த பகுதியில் 180 மி.மீ. வரை மழை பெய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

லூபிட் புயல் தென்மேற்கு ஜப்பானில் கரையை கடக்கிறது என கணிக்கப்பட்டுள்ளது.

# துருக்கியில் பஸ் கவிழ்ந்து விபத்து; 15 பேர் உயிரிழப்பு; 17 பேர் காயம்

துருக்கியில் பாலிகேசிர் மாகாண நெடுஞ்சாலையில் பயணிகளுடன் பஸ் சென்றுகொண்டிருந்தபோது சாலையோரச் சரிவில் உருண்டு விழுந்தது. இதில், சம்பவ இடத்திலேயே 11 பேரும் மருத்துவமனையில் சிகிச்சைப் பலனின்றி 4 பேரும் உயிரிழந்தனா.

விபத்தில் காயமடைந்த 17 பேர் அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனா.

இதுகுறித்து கூடுதல் தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.



# உலகளவில் 20.34 கோடி பேருக்கு கொரோனா பாதிப்பு

உலகம் முழுவதும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு வருபவர்களின் எண்ணிக்கையும், உயிரிழப்போரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. வைரஸ் தொற்றின் இரண்டாவது அலை உருவாகி உலக நாடுகளை அச்சுறுத்தி வருகிறது.

கொரோனா வைரஸ் உருமாற்றம் அடைந்து பல அலைகளாக தாக்கத்தொடங்கியுள்ளது. இதனால், உலக நாடுகள் விழி பிதுங்கி நிற்கின்றன. தற்போதைக்கு தடுப்பூசியால் மட்டுமே கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறிவருகின்றமையால், தடுப்பூசி போடும் பணியும் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

டெல்டா வகை கொரோனா பரவலால் ஐரோப்பிய நாடுகளில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலும் தொற்று பரவல் அதிகரிக்கத்தொடங்கியுள்ளது. கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, இந்தியா, பிரேஸில், பிரான்ஸ், ரஷ்யா ஆகியவை முதல் 5 இடங்களில் உள்ளன.

இந்தநிலையில் உலகளவில் 20.34 கோடி பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது.



43,06 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். 18.27 கோடி பேர் குணமடைந்தனர்.

அமெரிக்காவில் மொத்தம் 3.65 கோடி பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 6,33,116 பேர் தொற்றால் உயிரிழந்துள்ளனர். அமெரிக்காவில் புதிதாக 24,390 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. ஒரே நாளில் 129 பேர் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

பிரேஸிலில் ஒரே நாளில் 13,893 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 388 பேர் பலியாகி உள்ளனர். மொத்த பாதிப்பு 2.01 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மொத்த பலி எண்ணிக்கை 5,63,470 பேர் ஆகும்.

# ஒவ்வொரு குடும்பத்தின் மீதும் ரூபா 2,63,976 கடன் சுமை தமிழக அரசின் வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டது



கடந்த 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியின் நிதிநிலைமை குறித்த வெள்ளை அறிக்கையை நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வெளியிட்டுள்ளார். இதுதொடர்பாகசெய்தியாளர்களிடம் பேசிய அவர், "முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் வழிகாட்டுதலின் பேரில் வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. முதலமைச்சரின்செயலாளர்கள் தெரிவித்த திருத்தங்களும் இடம்பெற்றுள்ளன. 2001 இல் அ.தி.மு.க. அமைச்சர் பொன்னையன் வெளியிட்ட அறிக்கை, துறைவாரியாக விரிவாக இல்லை.

வெள்ளை அறிக்கையில் தவறு இருந்தால் அதற்கு நானே பொறுப்பு என்பதற்காகவே என் பெயர் இடம் பெற்றுள்ளது. எங்களின் இலக்கை தெரிவிப்பதற்காகவே வெள்ளை அறிக்கை வெளியிட்டுள்ளோம்.

அ.தி.மு.க. ஆட்சியில் வருவாய் பற்றாக்குறை 1.50 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. 2011-16 இல் அ.தி.மு.க. ஆட்சியில் வருவாய் பற்றாக்குறை ரூபா.17ஆயிரம் கோடியாக இருந்தது. தமிழகத்தில் ஒவ்வொரு குடும்பத்தின் மீதும் ரூபா.2,63,976 கடன் சுமை உள்ளது.

2016-21 இல் அ.தி.மு.க. ஆட்சியின் வருவாய் பற்றாக்குறை ரூபா.1.5 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளில், நினைத்துப் பார்க்க முடியாத அளவில் வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. கடனை வாங்கி கட்டாயச் செலவு செய்யும் வகையில் மாநிலத்தில் நிதிநிலைமை சரிந்துவிட்டது. 5 ஆண்டுகளில் எந்த மாநிலத்திலும் இந்த அளவுக்கு வருவாய்ப் பற்றாக்குறை இருந்ததில்லை.

மாநிலத்தின் கடனைச் செலுத்தும் தன்மை குறைந்ததால் வட்டி வீதமும் அதிகரித்துள்ளது. உதாரணமாக, மின்வாரியத்தில் கடனை திருப்பிச்செலுத்தும் தன்மை குறைந்து, வட்டி அதிகரித்துள்ளது. கடன்களின் நிலை மற்றும் வருமானம், செலவினம் ஆகியவை எவ்வாறு மாறியுள்ளன என்பது வெள்ளை அறிக்கையில் உள்ளது. மாநிலத்தின் வளர்ச்சி, வேலைவாய்ப்பு எவ்வாறு உள்ளது என்பதையும் விளக்கியுள்ளோம். தமிழகத்தின் வருவாய் சரிந்துள்ளமையை ரிசர்வ் வங்கி, நிதிக்குழு உள்ளிட்ட அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன. முந்தைய தி.மு.க. ஆட்சியில் வருமானம் மேலதிகமாக இருந்தது" என்று அவர் தெரிவித்துள்ளார்.



# இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 35,499 பேருக்கு கொரோனாத் தொற்று

இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 35 ஆயிரம் பேருக்கு அதிகமானோருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இது குறித்து இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலில், இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 35,499 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் கடந்த 24 மணிநேரத்தில் 447 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்றும் இதுவரை மொத்தம் 4,28,309 பேர் கொரோனாவுக்கு உயிரிழந்துள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியா முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் தற்போது 4,02,188 பேர் கொரோனாவுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். கொரோனா மொத்த பாதிப்பு விகிதம் 2.35 சதவீதமாகவும் தினசரி தொற்று பாதிப்பு 2.59 சதவீதமாகவும் கொரோனாவிலிருந்து குணமடையும் அளவு 97.40 சதவீதமாகவும் உள்ளது. இது வரை மொத்தம் 50,86,64,759 பேருக்கு கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. நேற்று மட்டும் 16,11,590 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன என்றும் அந்த தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அனுமதியின்றி மதுரையில் ஜல்லிக்கட்டு; ஐவர் கைது



மதுரையில் விதிகளை மீறி ஜல்லிக்கட்டு நடத்தப்பட்ட புகாரில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுரை உத்தக்குடியின் கண்மாய் பகுதியில் அப்பகுதி இளைஞர்கள் வட்ஸ்அப் குழு மூலம் இணைந்து ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்தியுள்ளனர்.

கொரோனாத் தடுப்பு விதிகளையும் மீறி மாவட்ட நிர்வாகத்தின் அனுமதியைப் பெறாமலும் ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டுள்ளது. இதில் 200 இற்கும் மேற்பட்ட வீரர்கள் காளைகளை அடக்க முயன்றமை தெரியவந்தது. தகவல் அறிந்து அங்கு சென்ற பொலிஸார் 3 காளைகள், சரக்கு வாகனம் உள்ளிட்டவற்றை பறி முதல் செய்துள்ளதோடு, ஜல்லிக்கட்டை ஏற்பாடு செய்ததான குற்றச்சாட்டில் 5 பேரைக் கைதும் செய்துள்ளனர்.

இதேபோல் கள்ளக்குறிச்சி மாவட்டம் சேசமுத்திரம் பகுதியிலும் ஜல்லிக்கட்டு நடத்த ஏற்பாடு செய்ததாக 25 பேர் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

# எடியூரப்பாவுக்கு அமைச்சருக்கான சலுகைகள்

## கர்நாடக அரசு அறிவிப்பு



கர்நாடகத்தில் உள்ள பாரதிய ஜனதா ஆட்சியில் முதலமைச்சராக இருந்த எடியூரப்பா கடந்த ஜூலை மாதம் 26 ஆம் திகதி தனது பதவியை ராஜினாமாச் செய்திருந்தார். வயதில் மூத்தவர்கள் ஏனையோருக்கு வாய்ப்பினை வழங்கவேண்டும் என்ற பா.ஜ.கவின் புரிந்துணர்வு அடிப்படையில் முன்னரே ஒத்துக்கொண்டபடி இரு வருடங்கள் பதவியிலிருந்தபின்னர் அவர் பதவி துறந்திருந்தார்.

இதையடுத்து, அவரது நெருங்கிய ஆதரவாளரான பசவராஜ் பொம்மை முதலமைச்சராகப் பதவி ஏற்றுள்ளார். இந்த நிலையில், முதலமைச்சர் பதவியை எடியூரப்பா ராஜினாமாச் செய்திருந்தாலும், அவருக்கு மந்திரிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் வழங்கப்படும் என்று தற்போதைய முதல்வர் பசவராஜ் பொம்மை அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக கர்நாடக அரசு சார்பில் அதிகாரபூர்வ அறிவிப்பும் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், முன்னாள் முதலமைச்சர் எடியூரப்பாவுக்கு அமைச்சர்களுக்கு நிகரான சலுகைகள் அனைத்தும் வழங்கப்படும் என்றும் இந்தச் சலுகைகள் முதலமைச்சர் பதவியில் பசவராஜ் பொம்மை இருக்கும் வரையில் தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மும்பையில் 2 டோஸ் தடுப்பூசிகளைச் செலுத்தியோர் மின்சார ரயில்களில் பயணம் செய்ய அனுமதி

கொரோனா 2ஆவது அலை உச்சம் தொட்டதையடுத்து கடந்த ஏப்ரல் மாதம் மும்பையில் மின்சார ரயில்களில் பொது மக்கள் செல்லத் தடைவிதிக்கப்பட்டு, அத்தியாவசிய, சுகாதார மற்றும் அரசு ஊழியர்கள் மட்டுமே மின்சார ரயில்களில் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். இதன் காரணமாக பொதுமக்கள் தங்கள் பணிகளுக்குச் செல்ல முடியாமல் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக புறநகர் பகுதிகளில் வசிக்கும் மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர்.

2 டோஸ் தடுப்பூசிகளைச் செலுத்திக் கொண்டவர்களை மின்சார ரயில்களில் அனுமதிக்க வேண்டும் என காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் மத்திய மந்திரியுமான மிலிந்த் தியோரா மாநில அரசுக்குக் கடந்த மாதம் கோரிக்கை விடுத்திருந்தார். இதை யடுத்துமற்றகட்சிகளும்பல்வேறுதரப்பினரும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினர். மின்சார ரயில்களில் பொதுமக்களைப் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும் என பா.ஜனதா கட்சி கடந்த சில நாள்களுக்கு முன் மும்பையில் போராட்டமும் நடத்தியது.


நேற்று இரவு சமூகவலைத்தளம் மூலமாக பொதுமக்களிடம் உரையாற்றிய மாநில முதலமைச்சர் உத்தவ் தாக்கரே, மும்பையில் 2 டோஸ் தடுப்பூசி போட்டவர்கள் மின்சார ரயில்களில் பயணம் செய்ய அனுமதி வழங்கப்படுவதாக அறிவித்தார்.

இதுவரை மும்பையில் 19 லட்சம் பேர் 2 டோஸ் தடுப்பூசிகளைப் போட்டுள்ளனர். எனவே, முதல் கட்டமாக மின்சார ரயில்களில் 2 டோஸ் தடுப்பூசி போட்டவர்கள் பயணம் செய்ய அனுமதி வழங்கப்படுகிறது. 2 ஆவது டோஸ் தடுப்பூசி போட்டு 14 நாள்கள் முடிந்தவர்கள் வருகிற 15 ஆம் திகதி முதல் மின்சார ரயில்களில் பயணம் செய்யலாம்.

தடுப்பூசி போட்டவர்கள் மின்சார ரயிலில் பயணம் செய்ய ஒன்லைனில் டிக்கெட் பெற கைப்பேசிகளுக்கான செயலி உள்ளது. பொதுமக்கள் தடுப்பூசி போட்ட விவரங்களைக் கொடுத்து அதில் டிக்கெட் மற்றும் மாதாந்த பாஸ்களைப் பெறலாம். ஸ்மார்ட் கைப்பேசிகள் இல்லாதவர்கள் நேரடியாகவும் புகையிரத நிலையங்களிலும் வழமையான இடங்களிலும் அவற்றைப் பெறலாம். க்யூ ஆர் கோட் மூலமாக அவற்றின் உண்மைத் தன்மை பரிசோதிக்கப்பட்டு பயண அனுமதி வழங்கப்படும் என்று முதல்வர் உத்தவ் தாக்கரே தெரிவித்திருக்கிறார்.



# திருவிழாவில் கலந்து கொண்ட 114 பேருக்கு கொரோனா தொற்று



மட்டக்களப்பு – களுவங்கேணி மாரியம்மன் கோவில் திருவிழாவில் கலந்து கொண்டோரில் 114 பேருக்கு கொவிட்19 தொற்றுறுதியாகியுள்ளது.

இந்த நிலையில், தொற்றுறுதியானவர்களுடன் தொடர்பை பேணியவர்கள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன என செங்கலடி பொது சுகாதார காரியாலயம் தெரிவித்துள்ளது.

முன்னதாக மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையானோருடன் குறித்த ஆலய திருவிழாவினை நடத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

எனினும், அதிக எண்ணிக்கையிலானோர் ஆலய திருவிழாவில் பங்கேற்றதன் காரணமாக இவ்வாறு அதிகளவானோருக்கு கொவிட்19 தொற்றுறுதியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் மஹோற்சவம் தீர்த்தோற்சவத்துடன் நிறைவு

இராம பிரானால் வழிபாடு செய்யப்பட்டதாக கருதப்படும் கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெற்றது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மாவட்ட கொவிட் செயலணியின் தீர்மானத்திற்கு அமைவாக இம்முறை கொடியேற்றம் செய்யாமல் அபிஷேக ஆராதனைகளுடன் ஆலய நிருவாகம் மற்றும் உபயகாரர்களின் மட்டுப்படுத்தப்பட்டளவிலானோரின் பங்கேற்புடன் வருடாந்த மஹோற்சவம் கடந்த 30.07.2021 ஆந் திகதி முதல் இடம்பெற்றுவந்திருந்தது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவை ஒருங்கே அமையப்பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயத்தின் பிதிர்க்கடன் தீர்க்கும் தீர்த்தோற்சவம் சிறப்பு பெறுகின்றது.

நேற்று காலை மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் விசேட யாக பூஜை, மூலமூர்த்திக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபத்தில் எழுந்தருளியுள்ள மாமாங்கேஸ்வரருக்கு விசேட பூஜைகள் நடைபெற்று முக்கியத் துவம் வாய்ந்த ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் ஆலய வளாகத்தில் உள்ள தீர்த்தக்குளத்தில் நடைபெற்றது.

# வைத்தியசாலைக்குச் கொண்டு செல்ல யாரும் முன் வரவில்லை

## தேத்தாத்தீவு கடற்கரைப் பகுதியில் மரணமடைந்த முதியவர்

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேத்தாத்தீவு கடற்கரைப்பகுதியில் கடந்த சனிக்கிழமை மாலை 6 மணியளவில் அடையாளம் தெரியாத நபர் ஒருவர் வீழ்ந்து கிடக்கின்றமையை அறிந்த அப்பகுதி மக்கள் அவருக்கு அருகில் செல்லவோ அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவோ யாரும் முன் வரவில்லை.

இந்நிலையில் குறித்த பகுதியில் அடையாளம் தெரியாத நபர் ஒருவர் வீழ்ந்து கிடைக்கின்றமை தொடர்பில் தகவல் அறிந்த களுவாஞ்சிகுடி பொலிஸாரும், அப்பகுதி கிராம சேவை உத்தியோகஸ்த்தரும், அவ் இடத்திற்கு விரைந்து அங்கு வீழ்ந்து கிடப்பவரை அவதானித்துள்ளனர்.

பின்னர் வீழ்ந்து கிடந்தவரை பொலிசாரும், கிராம சேவை உத்தியோகஸ்த்தரும் மீட்டு களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். இவ்வாறு பொலிசாரால் அனுப்பி வைக்கப்பட்ட நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி சனிக்கிழமை இரவு 7 மணியளவில் உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது.

குறித்த நபர் செலுத்திச் சென்றதாகக் கருதப்படும் துவிச்சக்கர வண்டியை மீட்டு பொலிஸார் எடுத்துச் சென்றுள்ளமையுடன் இவ்வாறு உயிரிழந்தவரின் பெயர், ஊர் என்பன இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை எனவும், இதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளோம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# கண்ணகிபுரத்தில் மக்களின் குடியிருப்புக்குள் யானைகள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பிரதேச செயலக நிர்வாக எல்லைக்கு உட்பட்ட கண்ணகி புரத்தில் மக்களின் குடியிருப்புக்களை யானைகள் இலக்குவைத்து சேதப்படுத்தியுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு வேளையில் மக்களின் குடியிருப்புக்கள் நோக்கி வருகை தந்திருந்த யானைகள் ஒரு வீட்டை சேதப்படுத்தியமை மாத்திரமல்லாது வீட்டுத் தோட்டங்களையும் பலத்த சேதத்திற்கு உள்ளாக்கியுள்ளன.

சம்பவம் நடைபெற்ற வீட்டினுள் நித்திரையில் உறங்கியவர்கள் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர். இது தொடர்பாக வீட்டு உரிமையாளர் வெல்லாவெளி பொலிஸ் நிலையத்தில் யானைகளின் தாக்கம் தொடர்பாக முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குற்றச்செயல்களில் ஈடுபட்ட மூவர் கைது



மட்டக்களப்பு வாகரை புச்சாக்கேணி பிரதேசத்தில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 3 நபர்களை நேற்று கைது செய்துளோம் என வாகரை பொலிஸார் தெரிவித்துள்ளனர் இந்த நபர்களிடமிருந்து புச்சாக்கேணி கிராமத்தில் உள்ள தோட்டங்கள் மற்றும் வீடுகளிலிருந்து திருடப்பட்ட 7 நீர் இறைக்கும் இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிராமத்தில் தொடர்ச்சியாக நீர் இறைக்கும் இயந்திரங்கள் திருடப்பட்டு வந்த நிலையில் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பட்ட முறைப்பாட்டினையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் இந் நபர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என வாகரை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யு, எம்.விஜயவர்த்தன தெரிவித்தார்.கைது செய்யப்பட்டவர்கள்வாழைச்சேனை மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.பசில் முன்னிலை யில் நேற்றையதினம் முன்னிலைப்படுத்தப்பட்டபோது சந்தேகநபர்களை எதிர்வரும் 18.8.2021 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸாருக்கு கட்டளை பிறப்பித்தார்.

# வந்தாறுமூலையில் பாரிய விபத்து; மூவர் படுகாயம்







மட்டக்களப்பு –திருகோணமலை பிரதான வீதியின் வந்தாறுமூலை பகுதியில் இன்று இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் மூன்று பேர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்தானது மழை பெய்து கொண்டிருந்த வேளை எதிரெதிரே பயணித்துக்கொண்டிருந்த சிறியரக லொறியும் பிக்கப் வண்டியொன்றும் மோதி நிகழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்தியா - இங்கிலாந்து முதல் டெஸ்ட் போட்டி மழையினால் வெற்றி தோல்வியின்றி முடிந்தது

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் நொட்டிங்ஹாம் டிரெண்ட் பிரிட்ஜ் மைதானத்தில் நடைபெற்ற முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மழை காரணமாக எந்த அணிக்கும் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்துள்ளது. இந்தியா வெற்றி பெற 157 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்பட்ட நிலையில், நேற்றைய ஐந்தாம் நாள் ஆட்டம் மழை காரணமாக முழுமையாகக் கைவிடப்பட்டது.

இந்த போட்டியில் மொத்தமாக சுமார் இரண்டரை நாள்களுக்கு மேலான காலப்பகுதி மழையினால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. மீதமிருந்த நாள்களில் இந்திய அணி இரண்டு இன்னிங்ஸிலும் இங்கிலாந்தின் அனைத்து விக்கெட்டுக்களையும் வீழ்த்தி இந்தப் போட்டியில் ஆதிக்கம் செலுத்தி வந்தது. இந்திய அணியின் கே.எல்.ராகுல் முதல் இன்னிங்ஸில் அடித்த 84 ஓட்டங்களும் ஜடேஜாவின் 56 ஓட்டங்களும் இந்தியாவை முன்னிலை பெற வைத்தன.

ஆயினும், இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணித் தலைவர் ஜோ ரூட் சதமடித்து, இங்கிலாந்து 200ஐக் கடந்த இலக்கை இந்தியாவுக்கு நிர்ணயிக்க வழிசெய்திருந்தார்.

இருஅணிகளதும்பந்துவீச்சாளர்கள் இந்தப் போட்டியில் தமது ஆதிக்கத்தைச் செலுத்தியதால், மழையால் போட்டி பாதிக்கப்பட்டாலும் முடிவொன்று எட்டப்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால், இறுதி நாள் ஆட்டம் முழுவதுமாகக் கைவிடப்பட நேர்ந்ததால் அது இறுதியில் சாத்தியமாகவில்லை.



இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக ஜோ ரூட் தெரிவுசெய்யப்பட்டார். தொடரில் இன்னும் நான்கு போட்டிகள் மீதமுள்ள நிலையில் இரண்டாவது போட்டி வரும் 12ஆம் திகதி லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.



# அமெரிக்க சி.ரி. பகிரங்க டென்னிஸ் ஜனிக் சின்னர் சம்பியனானார்

அமெரிக்கத் தலைநகர் வொஸிங்டன் டிசியில் நடைபெற்ற ஆண்களுக்கான சி.ரி. பகிரங்க டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் இத்தாலியின் ஜனிக் சின்னர்சம்பியன்பட்டம்வென்றுள்ளார்.

விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஜனிக் சின்னர், அமெரிக்காவின் மக்கென்ஸி மக்டொனால்ட்டை எதிர்கொண்டார். பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முதல் செட்டை 7-5 என ஜனிக் சின்னர் போராடிக் கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில் முனைப்போடு விளையாடிய மக்டொனால்ட், செட்டை 6-5 என வென்று பதிலடி கொடுத்தார். இருவரும் தலா ஒரு செட்டைக் கைப்பற்றியதால் வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது செட் எதிர்பார்ப்பை ஏற்றியது. அதில் பிடிகொடுக்காமல் சிறப்பாக விளையாடிய ஜனிக் சின்னர் 7-5 என செட்டைக் கைப்பற்றி சம்பியன் பட்டத்தை வென்றார்.

தரவரிசையில் 24 ஆவது இடத்தில் இருக்கும் 19 வயதான ஜனிக் சின்னர், ஏடிபி 500 தொடரில் சம்பியன் பட்டம் வெல்வது இதுவே முதல் முறையாகும்.

## ஸ்டைரியா கிராண்ட் பிரிக்ஸ்

# மோட்டர் சைக்கிள் பந்தயம் ஜோர்ஜ் மார்ட்டின் முதலிடம்

மோட்டோ ஜிபி தொடரின் ஸ்டைரியா கிராண்ட் பிரிக்ஸ் மோட்டார் சைக்கிள் பந்தயத்தில், டுகாட்டி அணியின் ஜோர்ஜ் மார்ட்டின் முதலிடம் பிடித்துள்ளார்.



இளையவர்களின் விருப்ப விளையாட்டாக உலகெங்கும் ரசிக்கப்படும் மோட்டோ ஜிபி மோட்டார் சைக்கிள் பந்தயம், ஆண்டுக்கு 19சுற்றுகளாகபல்வேறு நாடுகளில் நடைபெறுவது வழைமை. ஆண்டின் பத்தாவது சுற்றான ஸ்டைரியா கிராண்ட் பிரிக்ஸ் பந்தயம், நேற்று ரெட் புல் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது. இதில் 21 வீரர்கள் கலந்து கொண்டனர்.

டுகாட்டி அணியின் ஜோர்ஜ் மார்ட்டின் பந்தயத் தூரத்தை 38 நிமிடங்கள், 07.879 வினாடிகளில் கடந்து முதலிடத்தையும்முதலிடத்திற்கான25புள்ளிகளையும் கைப்பற்றினார். சுசூக்கி அணியின் ஜோன் மிர், மார்ட்டினைவிட 1.548 வினாடிகள் பின்னிலையில் பந்தயத் தூரத்தைக் கடந்து இரண்டாவது இடத்தைப் பிடித்ததோடு, அதற்கான 20 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டார். இவரையடுத்து, யமஹா அணியின் ஃபேபியோ குவார்டாரோ, 9.632 வினாடிகள் பின்னிலையில் பந்தயத் தூரத்தைக் கடந்து மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

அத்துடன் இதற்கான 16 புள்ளிகளையும் அவர் பெற்றுக் கொண் டார்.

இதுவரை நடந்து முடிந்துள்ள பத்து சுற்றுப் போட்டிகளின் அடிப்படையில், யமஹா அணியின் ஃபேபியோ குவார்டாரோ நான்கு வெற்றிகளுடன் 172 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் உள்ளார். டுகாட்டி அணியின் ஜோஹன் சார்கோ, 132 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் சுசூக்கி அணியின் ஜோன் மிர், 121 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

பதினொராவது சுற்றான ஒஸ்திரியன் ஜிபி, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி ரெட் புல் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது.



# டோக்கியோ ஒலிம்பிக்கில் அமெரிக்கா முதலிடம்

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள் நேற்றுடன் நிறைவடைந்துள்ளன.

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் கடும் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் 205 நாடுகள் பங்கேற்றன.

மகளிர் கூடைப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட அணிகளும், நான்கு வித சுற்றுகள் கொண்ட பெண்கள் ஒம்னியம் சைக்கிளோட்டப் போட்டியில் ஜெனிபர் வலன்டே வென்ற தங்கப்பதக்கங்கள் அமெரிக்காவின் பதக்க எண்ணிக்கையை உயர்த்த, மொத்தப் பட்டியலில் சீனாவைப் பின்தள்ளி முதலிடம் பிடித்தது.

ஒலிம்பிக் போட்டிகள் நிறைவில் இம்முறை அமெரிக்கா 39 தங்கம், 41 வெள்ளி, 33 வெண்கலம் என 113 பதக்கங்களுடன் முதலிடத்தைக் கைப்பற்றியது. சீனா 38 தங்கம், 32 வெள்ளி, 18 வெண்கலம் என மொத்தம் 88 பதக்கங்களுடன் இரண்டாமிடத்திலும், 27 தங்கம், 14 வெள்ளி, 17 வெண்கலம் அடங்கலாக மொத்தமாக 58 பதக்கங்களைப் பெற்று ஜப்பான் மூன்றாவது இடத்தையும் பிடித்தன.

பிரித்தானியா 22 தங்கம், 21 வெள்ளி, 22 வெண்கலங்களுடன் மொத்தமாக 65 பதக்கங்களைப் பெற்று நான்காமிடத்தைத் தக்கவைத்துள்ளது. 20 தங்கம், 28 வெள்ளி, 23 வெண்கலம் அடங்கலாக மொத்தமாக 71 பதக்கங்களைப் பெற்ற ரஷ்யக் குழு ஐந்தாமிடத்திலும், 17 தங்கம் அடங்கலாக 46 பதக்கங்களைப் பெற்ற ஆஸ்திரேலியா ஆறாமிடத்தையும் பிடித்தன.

நெதர்லாந்து (10 தங்கம்), பிரான்ஸ் (10 தங்கம்), ஜேர்மனி (10 தங்கம்), இத்தாலி (10 தங்கம்) ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

நிறைவு விழாவில் இறுதியில் அடுத்த ஒலிம்பிக் போட்டியை 2024 ஆம் ஆண்டு நடத்தும் நாடான பிரான்ஸிடம் ஒலிம்பிக் தீபம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டது.




# ஒலிம்பிக் மரதன் ஓட்டம் கென்யா வீரருக்கு தங்கம்

டோக்கியோ ஒலிம்பிக்கில் இறுதிநாளான நேற்று நடந்த ஆண்கள் மரதன் ஓட்டப் பந்தயத்தில் நடப்பு சம்பியனான 36 வயதுடைய கென்யா வீரர் எலியுட் கிப்சோகே தங்கப்பதக்கம் வென்றார். அவர் 42 கிலோமீற்றர் நீள பந்தயத் தூரத்தை 2 மணித்தியாலங்கள், 8 நிமிடங்கள், 38 விநாடிகளில் கடந்து முதலிடம் பிடித்தார். நெதர்லாந்தின் நகீயே அப்டி வெள்ளிப் பதக்கமும், பெல்ஜியம் வீரர் பஷீர் அப்டி வெண்கலமும் வென்றனர்.

மகளிர் மற்றும் ஆண்கள் மரதன் போட்டிகளில் பதக்கம் வென்ற வீர, வீராங்கனைகளுக்கான பரிசளிப்பு நிகழ்ச்சி நிறைவு விழாவின்போது நடத்தப்பட்டு அவர்களுக்கு தனி கௌரவம் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அரசு – புலிகள் இடையிலான போர் தொடர்பாக ஆர்வமாக அறியவிரும்புகின்றது ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தானின் முக்கிய நகரங்களை தலிபான் போராளிகள் கைப்பற்றிவரும் நிலையில் இலங்கையின் ஈடுபாட்டினை அந்நாட்டு அரசாங்கம் கோரியுள்ளது.

ஆப்கானிஸ்தான் மோதலில் வேறு எந்த நாட்டை விடவும் சிறப்பான பங்கை இலங்கை வகிக்க முடியும் என இலங்கைக்கான ஆப்கானிஸ்தான் தூதுவர் அஷ்ரப் ஹைதாரி குறிப்பிட்டுள்ளார்.

ஒன்லைனில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இலங்கைக்கான ஆப்கானிஸ்தான் தூதர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கை மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பான அனுபவங்களை ஆப்கானிஸ்தானுக்கு பகிர்ந்து கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை தற்போது ஆப்கானிஸ்தானுடன் வளர்ச்சி மற்றும் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள இந்தியாவும் பங்களிப்பை வழங்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

குறிப்பாக ஐ.நா. பாதுகாப்பு சபையின் தற்போதைய தலைவராக இருக்கும் இந்தியா, இந்த விவகாரம் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மேலும் சீன எல்லைக்கு அருகில் உள்ள பகுதிகளில் தலிபான் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தால் தீவிரவாதிகள் சீனா மற்றும் மத்திய ஆசியா மீது தாக்குதல் நடத்த வாய்ப்பு காணப்படுவதாகவும் ஆப்கானிஸ்தான் தூதுவர் எச்சரித்தார்.





## ஐக்கிய மக்கள் சக்தியின் வத்தளை அமைப்பாளராக ஹரின் பெர்னாண்டோ

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, ஐக்கிய மக்கள் சக்தியின் வத்தளை தொகுதியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என அந்தக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நியமனம் தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.

இதனடிப்படையில், ஹரின் பெர்னாண்டோ, தான் பிரதிநிதித்துவப்படுத்தி வரும் பதுளை மாவட்டத்தில் இருந்து தான் பிறந்து வாழும் கம்பஹா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

ஹரின் பெர்னாண்டோவின் மனைவியின் தந்தையான ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வின்சன் டயஸின் அரசியல் அடிப்படை காரணமாக ஹரின் பதுளை மாவட்டத்துக்குச் சென்றார்.

அத்துடன் பதுளை மாவட்டத்தில் அவருக்கு இருந்த புகழ் குறைந்து வருவதாகக் கூறப்படுகிறது.

2010 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட ஹரின் பெர்னாண்டோ கடந்த பொதுத் தேர்தலில் அந்த மாவட்டத்தில் போட்டியிடவில்லை என்பதுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப் பட்டார்.

## களுபோவில ஆதார வைத்தியசாலை பிணவறையில் 37 சடலங்கள்; 17 பேர் மாத்திரமே கொவிட் சாவு

### ஜயசுமன தகவல்

களுபோவில வைத்தியசாலையின் பிணவறையின் குளிர்சாதனப் பெட்டிகளில் வைக்கப்பட்ட 37 சடலங்களில் 20 சடலங்கள் கொரோனாத் தொற்று அல்லாத இறப்புகள் என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன கூறினார்.

குறித்த வைத்தியசாலைக்கு ஆய்வுக்காகச் சென்றிருந்த அமைச்சர், இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகத்மொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இறந்தவர்களின் நெருங்கிய உறவினர்கள் வைத்தியசாலையை அடைய முடியாமலும் தொற்றுநோய்க்கு மத்தியில் சடலங்களைக் கோருவதற்கான முழுமையான ஆவணங்கள் காரணமாகவும் சடலங்கள் அகற்றப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும் அவற்றை அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அமைச்சர் கூறியுள்ளார்.

இதேநேரம், நோயாளிகளால் வைத்தியசாலை நெரிசல் அடைவது தொடர்பான வீடியோ காட்சிகள் சமூக வலைத் தளங்களில் வைரலாகி வருகின்றன.

எவ்வாறிருப்பினும் அது இப்போது கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இதுவொரு குறிப்பிட்ட நாளில் மட்டுமே நடந்தது என்றும் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க மேலும் இரண்டு விடுதிகளை ஏற்பாடு செய்துள்ளதால், தற்போது பிரச்சினை முடிந்து விட்டது என அவர் மேலும் குறிப் பிட்டுள்ளார்.

## அபூர்வ கிராமம் கண்டுபிடிப்பு!

*இலங்கையில் நாள் ஒன்றுக்கு 7 மணித்தியாலங்கள் மட்டுமே சூரிய வெளிச்சத்தை காணும் மக்கள் வாழும் கிராமம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.*

*லுணுகம பிரதேச செயலகத்தின் மடொல்சீம கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள கொஹொனாவெல என்ற கிராமத்தில் யஹன்கல, கல் உல்ல, ஹய்ன்தம்மாகல மற்றும் வியன்கல ஆகிய மலைத்தொடர்களுக்கு நடுவில் இந்தக் கிராமம் அமைந்துள்ளது.*

*இந்தக் கிராமம் 1815 ஆம் ஆண்டு ஊவா வெல்லஸ்ஸ கிளர்ச்சியின் போது மறைந்துக் கொள்வதற்காக ஒரு சிலரால் உருவாக்கப்பட்டது.*

*தற்போது இந்த கிராமத்தில் சுமார் 55 குடும்பங்கள் விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.*

*இந்த கிராமத்தில் நாள் ஒன்றுக்கு 7 மணித்தியாலங்கள் மாத்திரமே சூரிய வெளிச்சத்தை காண முடிவதாக தெரிய வந்துள்ளது.*

*அத்துடன் இந்த கிராமத்தில் வாழும் மக்கள் மிகவும் நெருக்கடியான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர்.*

*அருகிலுள்ள கிராமங்களுக்கு செல்வதற்கு பாதைகள் கூட இல்லை என குறிப்பிடப்படுகின்றது.*

## கலைஞர் கருணாநிதியின் மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி கூட்டம் நேற்று கொழும்பில் நடந்தது



தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் அமரர் கலைஞர் கருணாநிதியின் மூன்றாவது ஆண்டு நினை வஞ்சலி கூட்டம் கொழும்பு பிரைட்டன் விருந்தகத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதா கிருஷ்ணன் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் கலைஞர் கருணாநிதியால் இயக்கப்பட்ட தமிழ் தாய் வாழ்த்து இசைக்கப்பட்டதுடன், திருவுருவப்படத்துக்கு மாலை அணிவித்து வருகை தந்திருந்தவர்களால் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கலைஞர் கருணாநிதியின் நினைவு பேருரை யையும், விசேட உரையையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப் பினருமான ரவூப் ஹக்கீம் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வை இலங்கை இந்திய செய்தி தொடர்பாளர் மணவை அசோகன், கலைச்செல்வன், தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் உட்பட்ட குழுவினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

நிகழ்வில் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் கே.பி. குருசாமி, குமரகுருபரன், கொழும்பு மாநகர சபையின் பிரதி முதல்வர், எதிர்க்கட்சி தலைவர், மலையக மக்கள் முன்னணியின் செயலாளரும், பேராசியருமான எஸ்.விஜய சந்திரன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கொழும்பு அமைப்பாளர் கே.செல்லசாமி உட்பட பத்திரிகையாளர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.08.2021இல் வெளியிடப்பெற்றது.